உ

கடவுள் துணை.

சிதம்பரம்

நடராஜபதிமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதல் வீதி மதராஸ் என். சி.

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில். இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவ ரவர்கள் வாசித்தும் பிறரால் சொல்லக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரங்கதைகளை ஒன்று ய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது எற்படுத்தி யிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெ யர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அரு மையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிற தென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொ ள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச் செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம் சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. இளோஸகாகிதத்தில் உயர்ந்த டயி ண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

உ

கடவுள் துணை.

நடராஜபதிமாலை.

அருணிலைவிளங்குஞ் சிற்றம்பலமெனுஞ்
சிவசுகாதீத வெளிநடுவிலே
யண்டபகிரண்டகோடிகளுஞ் சராசரமனைத்துமவை
யரக்கன் முதலாம்
பொருணிலைச்சத்தரொடு சத்திகளனந்தமும்
பொற்பொடு விளங்கியோங்கப்
புறப்புறமகம்புறம் புறமகமிவற்றின்மேற்
பூரணா காரமாகித்
தெருணிலைச்சச்சிதா னந்தகிரணாதிகள்
சிறப்பமுத லந்தமின்றித்
திகழ்கின்றமெய்ஞ்ஞான சித்தியனுபவநிலை
தெளிந்திட வயங்குசுடரே
சுருநிலைக்குழலம்மை யானந்தவல்லிசிவ
சுகிதரிக் கினிய துணையே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. (க)

என்னியவுடம்பிலே யன்பிலே
யிதயத்திலே தயவிலே

என்னுயிரிலே யென்றனுயிருக்குயிரிலே
　　என்னியற் குணமதனிலே
இன்னியதென்வாக்கிலே யென்னுடையநாக்கிலே
　　யென்செவிப் புலநிசையிலே
யென்னிருகண்மணியிலே என்கண்மணியொளியிலே
　　யென்னனுபவந் தன்னிலே
தன்னியலின்னறிவிலே யறிவினுக்கறிவிலே
　　தானேகலந்து முழுதுந்
தன்மயமதாக்கியே தித்தித்துமென்மேற்
　　றதும்பிநின் றகின்றவமுதே
துன்னியபெருங் கருணைவெள்ளமே
　　யழியாதசுகமே சுகாதீதமே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
　　ஜோதிநட ராஜபதியே. (௨)
உடலெலாமுயிர்வெலா முணர்வெலா
　　முள்ளன வெலாங்கலந்தே
ஒளிமயமதாக்கி யிருணீக்கியெக்காலத்து
　　முதயாத்த மானமின்றி
இடலெலாம்வல்லசிவ சத்திகிரணங்கியாய்
　　ஏகமாய் ஏகபோக
இன்பநிலையென்னுமொரு சிற்சபையிநடுவே
　　யிலங்கிநிறைகின்ற சுடரே
கடலெலாம்புவியெலாம் கனலெலாம்வளியெலாங்
　　ககனெலாங் கண்டபரமே

காணுதபொருளெனக் கலையெலாம்புகலவென்
கண்காண வந்தபொருளே
தொடலெலாம்பெற வணுக்குள்ளும்புறத்தும்
மெய்த்துணையாய் விளங்குமறிவே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே. (௫)
மெய்தழையருள்ளங் குளிர்ந்துவகைமாறுது
மென்மேற் கலந்துபொங்க
விச்சையறிவோங்கவென் னிச்சையறிவனுபவம்
விளங்கவறி வறிவதாகி
உய்தழைவளிந்ததெலாம் வல்லசித்ததுதந்
துவட்டாது ளூறியூறி
யூற்றெழுந்தென்னையன் தானுக்கிஎன்னுள்ளே
உள்ளபடி யுள்ளவமுதே
கைதழையவந்தவான் கனியேயெலாங்கண்ட
கண்ணே கலந்தநடுவே
கற்பனையிலாதோங்கு சிற்சபாமணியே
கணப்பருங் கருணைநிறைவே
துய்தழைக்கப் பித்தழைத்தறிவேயருட்
சுகபோக யோகவுருவே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே (௬)
எண்ணிவாரண்டபகி ரண்டத்தின்முதலிலே
யிடையிலே கடையிலேமேல்

எற்றத்தில்லை யவையுளூற்றத்திலே
டெய்துவடிவந் தன்னிலே
கண்ணுருவருவிலே யுருவிலேகுருவிலே
கருவிலே தண்மைதனிலே
கலையாதிநிலையிலே சத்திசத்தாகிக்
கலந்தோங்குகின்ற பொருளே
தெண்ணிலாக் காந்தமணிமேடைவாய்க்
கேடைவாய்ச்சேர்ந் தனுபவித்தசுகமே
சித்தெலாஞ்செயவல்ல தெய்வமேஎன்மனதை
திருமாளிகைத் தீபமே
துண்ணுராச்சாந்த சிவஞானிகளுளத்தே
சுதந்தரித் தெளிசெய்யொளியே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. (ரு)
அம்புவியிலேபுவியி னடியிலேமுடியிலே
யம்மண்டலந் தன்னிலே
யகிலத்திலேபுவியி னகிலத்திலேயவைக்
கானவடி வாசிதனிலே
விம்பமுறவே நிறைந்தாங்கவைநிகர
விளக்குமவை யவையாகியே
மேலுகவையவையாகிய வையவையலாததொரு
மெய்ந்நிலையு மானபொருளே
தம்பமிசையெனையேற்றி யமுதூற்றியழியாத
தலத்திலுற வைத்தவரசே

சாகாதவித்தைக் கிலக்கணமிலக்கியந்
தானுயிருத்த பரமே
தொம்பலமுமுடனுற்ற தற்பதமுமசிபதச்
சுகமுமொன் றனசிவமே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே (சு)

நீரிலேநீருற்ற நிறையிலேநிறையுற்ற
நிலையிலே நுண்மைதனிலே
நிகழ்விலேநிகழ்வுற்ற நிகழ்விலேநிழலிலே
நெகிழிலே தண்மைதனிலே
ஊரிலேயங்கீரி னுப்பிலேயுப்பினுறு
மொண்சுவையிலே திரையிலே
யுற்றநீர்க்கீழிலே மேலிலேநடுவிலே
யுற்றியலுருத்து மொளியே
காரிலேயொருகோடி பொழியினுந்துணைபெறுக்
கருணைமழைப் பொழிமேகமே
கனகசபைநடுநின்ற கடவுளேசிற்சபைக்
கண்ணேங்கு மொருதெய்வமே
தூரிலேபலமளித் தூரிலேவளர்கின்ற
சுகசொரூப மானதருவே

சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
ஜோதிநட ராஜபதியே. (எ)

ஒள்ளியநெருப்பிலே யுப்பிலேயொப்பிலா
வொளியிலே சுடரிலேயே
லோட்டிலேசூட்டிலே யுள்ளாடுமோட்டிலே
யுறுமாதி யந்தத்திலே
தெள்ளியநிறத்திலே யருவத்திலேயெலாஞ்
செயவல்ல செய்கைதனிலே
சித்தாய்விளங்கியுப சித்தாகியசத்திகண்
சிறக்கவளர்கின்ற வொளியே
வள்ளியேசிவானிந்த மலையேசுகாதீத
வானமே ஞானமயமே
மணியேயென்னிரு கண்ணுண்மணியே
என்னுயிரேஎன்வாழ்வே என்வாழ்க்கைவைப்பே
துள்ளியமனப்பேயை யுள்ளுறவடக்கி
மெய்ச்சுகமெனக் கீந்ததுணையே
சுத்தசிவசன்மார்க்க நிதியேயருட்பெருஞ்
சோதிநட ராஜபதியே (அ)

நடராஜபதிமாலை

முற்றிற்று.